MAY 2025 **P/ID 35326/PTL4S**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. ஆற்றுப்படை - குறிப்பு வரைக.

2. நக்கீரரை அறிமுகப்படுத்துக.

3. திருமுருகாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனைக் குறிப்பிடுக.

4. அகம் என்றால் என்ன?

5. முல்லைப்பாட்டின் பா வகை குறித்து எழுதுக.

6. குறிஞ்சிப்பாட்டு - பொருள் தருக.

7. பட்டினப்பாலை - பெயர்க்காரணம் கூறுக.

8. பாலைத்திணைக்கு உரிய உரிப்பொருளைக் குறிப்பிடுக.

9. பெருகு வளமதுரைக் காஞ்சி - விளக்கம் தருக.

10. மதுரைக்காஞ்சியின் தொடக்கம் குறித்து எழுதுக.

11. கொடுங்கோற் கோவலர் துன்புறக் காரணம் என்ன?

12. 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' - விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. சூரனை வென்ற வேலனின் சிறப்பினை எழுதுக.

14. முல்லைப்பாட்டின் வழி அறியலாகும் தலைவியின் துயரினை வெளிப்படுத்துக.

15. தலைவன்-தலைவின் காதல் நிகழ்வினை குறிஞ்சிப்பாட்டின் வழிநின்று விளம்புக.

16. காவிரியாற்றின் சிறப்பினைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் எவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளார்? விளக்குக.

17. மதுரையின் இயற்கை வளத்தினை எடுத்துரைக்க.

18. தலைவியை ஆற்றுப்படுத்திய செவிலியரின் நிலையை எடுத்தியம்புக.

19. கூதிர்காலத்தின் இயல்பு நிலையினை நக்கீரர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. ஆற்றுப்படை இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படை பெறுமிடத்தை மதிப்பிட்டாய்க.

21. போர்க்களச் சூழலை முல்லைப்பாட்டின் வழிநின்று விவரிக்க.

22. பட்டினப்பாலையின் வழி அறியலாகும் மக்களின் வாழ்வியலைத் தொகுத்துரைக்க.

23. மதுரை மக்களின் வாழ்வியலும் மதுரைக்காஞ்சியும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

24. நெடுநல்வாடை அகமா? புறமா? ஆய்க.

———————